# Revised

செய்தி வெளியீடு எண்.693 08.10.2009

## இந்து சமய அறநிலையத்துறை
## கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்
## 8.10.2009ந் தேதிய கூட்டம் – செய்திக் குறிப்பு

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களின் பணியாற்றும் கிராமக் கோயில் பூசாரிகளின் பாதுகாப்புக்காகவும், நலனுக்காகவும் "**கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்**" அமைத்து 22.1.2007–அன்று அரசு ஆணை வழங்கப்பட்டது.

இதையொட்டி 23.4.2007 நாளிட்ட அரசாணையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைவராகக் கொண்டு 9 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 10 அலுவல்சாரா உறுப்பினர்களும் நியமித்து ஆணையிடப்பட்டது.

வாரியத்தின் முதல் கூட்டம் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 22.5.2007–ல் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 18.3.2008 மற்றும் 6.11.2008 ஆகிய தேதிகளில் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. இன்று, 8.10.2009 மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திரு.ப.ரா.சம்பத், இ.ஆ.ப., மற்றும் அலுவல்சார்ந்த, அலுவல்சாரா உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இவ்வாரியத்தில் சேர்ந்துள்ள உறுப்பினர்கள் உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டு திட்டத்தின்கீழ் சேர்ந்து பயன்பெறும்வகையில் ஆணையிட்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இவ்வாரியத்தில் இதுவரை 36068 பூசாரிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாரியத்தின்மூலம், 151 பூசாரிகளுக்கு மூக்குக் கண்ணாடி வாங்கிடவும், 61 பூசாரிகளின் வாரிசுகளின் கல்வி கற்பதற்காக நிதி உதவி, 26 பூசாரிகளின் மகன்/மகள் திருமணத்திற்கு நிதி உதவி, இயற்கை மரணமடைந்த ஒரு பூசாரியின் வாரிசுக்கு நிதி உதவி, ஈமச்சடங்கிற்கு நிதி உதவி உள்ளிட்ட 240 பூசாரிகளுக்கு **ரூ.3.38 இலட்சம் மதிப்பில்** நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்றைய கூட்டத்தில், நலத்திட்டங்கள் பெறுவதற்கான வருமான உச்சவரம்பினை உயர்த்துதல், விதிமுறைகள் ஏற்படுத்துதல், திருமண நிதி உதவி திட்டம், மகப்பேறு நிதி உதவி திட்டம், உறுப்பினர்களாக சேர்ந்துள்ளவர்களை பதிவுசெய்தல் போன்ற பல்வேறு பொருண்மைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது.

கூடுதல் ஆணையர்
உறுப்பினர்/செயலர்

***********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9